2003 ஜனவரி 29] [திரு. சி. பொன்னையன்]

வெளியேற்றுமாறு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு வழியே இல்லாத காரணத்தால், அவையின் நிகழ்ச்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று காவலர்களுக்கு உத்தரவிடுகின்றேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்)

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன?

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மிக முக்கியமான பிரச்சினை. இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை ஏற்பட்டு இருக்கிற நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, ஆளுநர் உரை மீதான விவாதத்தில் இதைப் பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: இல்லை, இல்லை. இது முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பக்கத்தில் இருக்கிற திரு. கணேசனிடம் சொல்லி, பேசச் சொல்லுங்கள். கணேசன் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை ஏற்பட்டிருக்கிறது. அவசியம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் நடக்கிறபோது நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. நாட்கள் மிகக் குறைவு, நேரம் மிகக் குறைவு. ஆகவேதான் அவற்றையெல்லாம் எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை. திரு. கணேசன். (குறுக்கீடு)